# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 103/2015 நாள்.18.03.2026

DW-4 திரு.சங்கர் த/பெ. திரு.நல்லதம்பி

வாதிதரப்பில் குறுக்குவிசாரணை

எனக்கு என்ன ஊர் என்றால் குளிச்சபட்டு. தாவா சொத்து உள்ள ஊர் கத்தரிநத்தம் என்றால் ஆமாம். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் டீக்கடை வைத்துள்ளேன். வீடு எங்கே உள்ளது என்றால் குளிச்சபட்டு. கவி அவென்யூவில் வீடு உள்ளது என்றால் ஆமாம். பிளாட் எண் நம்பர் எனக்கு ஞபாகம் இல்லை. பத்திரம் யார் பெயரில் உள்ளது என்றால் என் பெயரில் இல்லை. அந்த பிளாட் போட்டது மணிமொழி என்றால் ஆமாம். மணிமொழி குடுமபத்தை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் 25 ஆண்டுகளாக தெரியும். எனக்கு வயது 42 ஆகும். நான் டீக்கடை வைத்துள்ள இடம் வீட்டை ஒட்டினார் போல் உள்ளது என்றால் ஆமாம். அதுவும் கவி அவென்யூவில் உள்ளது என்றால் ஆமாம். அதை பிளாட் போட்டது மணிமொழி என்றால் ஆமாம். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலம் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதா அல்லது தட்டச்சு செய்யப்பட்டது என்றால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது. அது எந்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. அதை தயார் செய்தது மணிமொழி என்றால் நான் சொல்லி அவர்கள் தயார் செய்து கொடுத்தார்கள். முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் தெரியும். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. மணிமொழி என்னை அழைத்து வந்தார் என்றால் ஆமாம். மணிமொழி என்ன வேலை செய்கிறார் என்றால் வைக்கோல் கட்டும் வேலை செய்கிறார். அவர் என்ன படித்துள்ளார் என்றால் எம்.பில். அவர் பூண்டி கல்லூரியில் வேலை பார்த்தார் என்றால் ஆமாம். நான் கலந்து கொண்ட பஞ்சாயத்து எங்கு நடந்தது என்றால் ஒருத்தவர் வீட்டில் நடந்தது. அது யார் வீடு என்று எனக்கு தெரியாது. யார் பஞ்சாயத்து பேசினார்கள் என்றால் கிருஷ்ணசாமி வாண்டையார் உதவியாளர் அவர் சொன்னதின் பேரில் பேசினார். என்னை யார் அழைத்தார்கள் என்றால் மணிமொழி அழைத்தார். அங்கு யார் யார் இருந்தார்கள் என்றால் மணிமொழி இருந்தார். அவருடைய அம்மா, அப்பா, மற்றும் குடிகாட்டைச் சேர்ந்த இமயா ஆகியோர்கள் இருந்தார்கள். எந்த நேரத்தில் நடந்தது என்றால் மதியம் 12 மணிக்கு மேல் இருக்கும். அந்த பஞ்சாயத்தில் என்ன பேசினார்கள் என்றால் பிளாட் போட்டதற்கான பணம் வரவில்லை அவருக்கும் அவரது தங்கைக்கும் திருமணம் நடந்த செலவு பணம் வரவில்லை. மேற்படி விஷயங்கள் மணிமொழியால் சொல்லப்பட்டது என்றால் ஆமாம். அதற்கு கல்யாண சுந்தரம் என்ன சொன்னார் என்றால் அதற்கு அவர் பணம் தருவதாக சொல்லி கையெழுத்து போட்டுக்கொடுத்தார். நான் அதில் சாட்சி கையெழுத்து போட்டேனா என்றால் இருந்தேன் ஆனால் போடவில்லை. பிளாட் போட்டதற்கு எவ்வளவு செலவு சொன்னார்கள் என்றால் ஞாபகம் இல்லை. கல்யாணத்திற்கு எவ்வளவு சொன்னார்கள் என்றால் பதின்மூன்று இலட்சம் சொன்னார்கள். இரண்டாம் பிரதிவாதியின் பாக வீதமாக எவ்வளவு தருவதாக ஒப்புக்கொண்டார்கள் என்றால் ஐம்பத்து

மூன்று இலட்சம். பஞ்சாயத்து படி பணம் கொடுத்துவிட்டார்களா என்றால் இல்லை அவர்கள் கோர்ட்டுக்கு போய்விட்டார்கள். இந்த வழக்கு எதற்காக போடப்பட்டுள்ளாதா என்றால் பாகப் பிரிவினைக்காக போடப்பட்டுள்ளது. பாபநாசத்தில் வழக்கு போடப்பட்டதாக சொல்லியுள்ளேனா என்றால் அவர் அப்பா போட்டார். அந்த வழக்கு எதற்காக போடப்பட்டது என்றால் பாகப்பிரிவினைக்காக போடப்பட்டது. இமயா கையெழுத்து போட்டாரா என்றால் இமயாவும் வாண்டையார் பி.ஏ வும் போட்டார்கள். அதன்அசல் யாரிடம் உள்ளது என்றால் என்னிடம் இல்லை. அசல் ஆவணம் 1ம் வாதியிடமும் நகல் ஆவணம் 2ம் பிரதிவாதியிடமும் உள்ளது என்று எனது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். 3ம் பிரதிவாதி யார் என்றால் மணிமொழி யின் தங்கை. அவர் திருமணம் எப்போது என்றால் தேதி தெரியாது. அந்த திருமணம் கல்யாண சுந்தரம் செய்து வைத்தார் என்றால் இல்லை மணிமொழி செய்துவைத்தார். எவ்வளவு செலவு ஆனது என்றால் பதினாறு இலட்சம் ஆகும். மணிமொழி கணக்கு காட்டினாரா என்றால் வாயால் தான் சொன்னார். தாவா சொத்து யாருக்கு சொந்தம் என்றால் கல்யாண சுந்தரம் அவருடைய மகன் மகள்கள் எல்லோருக்கும் சொந்தம். நான் சொல்லியுள்ளது போல் 2ம் பிரதிவாதி லேயவுட் போடவில்லை என்றும் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றும், நான் 2ம் பிரதிவாதிக்கு சொந்தமான கவி அவென்யூவில் வீடுகட்டி டீக்கடை வைத்துள்ளதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலம் 2ம் பிரதிவாதியால் தட்டச்சு செய்து வந்தது என்றும் நான் அதில் கையெழுத்து போட்டு அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. எனக்கு தெரிந்ததை நான் சொன்னேன். நான் அந்த பஞ்சாயத்தில் இல்லை என்றும் எனக்கு அதைப்பற்றி எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

1,3 பிரதிவாதிகள் தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.03.23 18:44:14 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**